முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை – 2017 யூலை

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2017-07-15
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  1. ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
     *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  2. ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  3. ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  4. *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  5. *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*
  6. ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினா வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  7. *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**ஷெஹான்** தனது சொந்த வியாபாரத்தை ஆரம்பிக்க நாட்டம் கொண்டுள்ளார். அவர் ஒரு முன்னணித் தனியார் வகுப்புக்கு அருகாமையில் சிறிய சிற்றுண்டிச்சாலையை ஆரம்பிக்க எண்ணுகின்றார். அவரது ஆரம்ப முதலீடு ரூ. 50,000/-. அந்தச் சூழலில் இந்த வியாபாரத்தினை ஒத்த வேறு பல கடைகளும் உள்ளன.

(A) கீழ்வரும் ஒவ்வொரு கட்டத்திலும் **ஷெஹானின்** மிகவும் சாத்தியமான வியாபார நோக்கங்களை **இனங்காண்க** :

(a) வியாபாரத்தின் ஆரம்பக் கட்டத்தில்

(b) அவர் தமது வியாபாரத்தில் வெற்றிபெற்றால், கிட்டத்தட்ட ஒரு ஆண்டு கழிந்த பின்னர்

(02 புள்ளிகள்)

(B) **ஷெஹானின்** வியாபாரத்தில் தாக்கம் செலுத்தக்கூடிய சமூக மற்றும் கலாசாரா காரணிகள் மூன்று (03) **கூறுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

“இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகமானது இடர் மதிப்பீடு, இடர் குறைப்பு, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகளின் மீளாய்வு ஆகியவற்றைக் கொண்டுள்ளது”.

(A) இடர் குறைக்கும் இரண்டு (02) முறைகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(B) இடர் குறைப்பு முறைகளுக்கு மூன்று (03) உதாரணங்கள் **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

“கணக்காய்வாளர் போதுமான, பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு தொழில்சார் சந்தேக மனப்பாங்குடன் (professional skepticism) உறுதிப்பாட்டு ஈடுபாட்டினை திட்டமிட்டு மேற்கொள்வதுடன், நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு ஒன்றினை திட்டமிட்டு மேற்கொள்ளும்போது அவர் தொழில்சார் சுயதீர்மானங்களை மேற்கொள்வார்.”

(A) “தொழில்சார் சந்தேக மனப்பாங்கு” எனும் பதத்தினை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(B) கணக்காய்வாளர் ஒருவர் தொழில்சார் சுயதீர்மானங்களைப் பிரயோகிக்கவேண்டிய மூன்று (03) கணக்காய்வுப் பகுதிகளை (areas of an audit) **இனங்காண்க.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

கணக்காய்வு நிறுவன மட்டம் மற்றும் தனித்தனிக் கணக்காய்வு மட்டங்களில் தரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளும் விதிமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தனித்தனிக் கணக்காய்வொன்றின் ஒவ்வொரு உதவியாளர்களாலும் மேற்கொள்ளப்படும் வேலைகள் தகுதியும் அனுபவமும் கொண்ட ஆளணியினரால் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

(A) கணக்காய்வு நிறுவனமொன்றினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய தரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளின் நோக்கங்கள் இரண்டினை (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(B) மிகவும் கனிஷ்ட நிலையிலுள்ள அணி அங்கத்தவரின் வேலைகளை மீளாய்வு செய்யும்போது அணியின் சிரேஷ்ட அங்கத்தவர் உறுதி செய்துகொள்ளவேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட சுவர்ணா செரமிக் (தனி) கம்பனியானது** தரைஓடுகள், சுவர்ஓடுகள் மற்றும் குளியலறைப் பொருட்கள் ஆகியவற்றின் சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இந்தக் கம்பனியின் வெளிவாரிக் கணக்காய்வாளர்களாக உமது கணக்காய்வு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளதுடன் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் அணியின் சிரேஷ்ட அலுவலராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.

கம்பனிப் பணிப்பாளர்கள் வங்கியொன்றிடமிருந்து ரூ. 150 மில்லியன் வங்கிக் கடன் கேட்டுள்ளனர். இந்தக் கடனை வழங்குவதற்கு அடுத்த ஐந்து (05) ஆண்டுகளுக்கான நிதிசார் எதிர்வுகூறல்களை (financial forecast) வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார். 5 ஆண்டு நிதிசார் எதிர்வுகூறல் பற்றிய உறுதிப்படுத்தல் ஈடுபாட்டினை (assurance engagement) மேற்கொள்ளுமாறு உமது கணக்காய்வு நிறுவனம் கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் கம்பனியின் நிதிசாராத விடயங்கள் பற்றி அவர்கள் அறிக்கையிட்டுள்ள பிரதான செயற்பாட்டு சுட்டிகளை (key performance indicators) மதிப்பாய்வு செய்யுமாறும் பணிப்பாளர்கள் கேட்டுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(A) “உறுதிப்படுத்தல் ஈடுபாடு (assurance engagement)” என்றால் என்னவென்பதை **விபரிக்குக.**
(04 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட சுவர்ணா செரமிக் (தனி) கம்பனி** கேட்டுக்கொண்ட சேவைகள் ஒவ்வொன்றிற்கும் உமது கணக்காய்வு நிறுவனம் மேற்கொள்ளக்கூடிய பொருத்தமான ஈடுபடுத்தல் வகைகளை (types of engagement) **ஏற்பிசைவு செய்க.** (06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

**வரையறுக்கப்பட்ட AB (தனி) கம்பனி** 2017 மார்ச 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வுக்கான ஈடுபடுத்தல் பங்காளர் (engagement partner) கணக்காய்வில் ஈடுபடவுள்ள அணியினருக்கு அவர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள் பற்றி சுருக்கமாக விளக்கியுள்ளார். போதுமான, பொருத்தமான கணக்காய்வுச் சான்றினைப் பெறுவதன் முக்கியத்துவத்தை ஈடுபடுத்தற் பங்காளர் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்வுக்கு நம்பத்தகுந்தவை யாகவும் தொடர்புடையதாகவும் இருக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். ஈடுபடுத்தல் அணியினர் கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கான சில விதிமுறைகளைத் தீர்மானித்துள்ளனர்.

**வரையறுக்கப்பட்ட AB (தனி) கம்பனியின்** அலுவலகக் கட்டடம் ஒரு தொழிற்பாட்டுக் குத்தகையின்கீழ் பெறப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் குத்தகை வாடகைச் செலவு 20% இனால் அதிகரித்திருப்பதை கணக்காய்வாளர்கள் அவதானித்துள்ளனர். கணக்காய்வாளர்கள் இதனை வேலைத்தாளில் ஆவணப்படுத்தியுள்ளனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(A) கணக்காய்வுச் சான்றுகளைச் சேகரிக்கும்போது கணக்காய்வுச் சான்றின் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் (increase the reliability) நான்கு (04) வழிகளை ***அடையாளங்காண்க.*** (04 புள்ளிகள்)

(B) குத்தகை வாடகைச் செலவில் அதிகரிப்பினை செவ்வைபார்க்கப் பயன்படுத்தக்கூடிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கான கணக்காய்வு விதிமுறைகள் (audit procedures) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

***வரையறுக்கப்பட்ட கிரவுண் ஹோல்டிங்*** ஆனது நாடு பூராகவும் 12 உபகம்பனிகளைக் கொண்டுள்ள கம்பனிகளின் குழுமமாகும். இந்தக் குழுமம் விவசாய மற்றும் மிருக வளர்ப்பு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழுமத்தின் உபகம்பனிகளுக்கு இடையில் கணிசமான விற்பனை மற்றும் கொள்வனவு ஊடுசெயல்கள் இடம்பெறுகின்றன. நீர் இந்த உபகம்பனிகளுள் ஒன்றான ***வ/வு கிரீன் (தனி) கம்பனியின்*** வெளிவாரிக் கணக்காய்வாளராவீர்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(A) தொடர்புடைய தரப்பினர் ஊடுசெயல்கள் (related party transactions) தொடர்பில் ***வ/வு கிரீன் (தனி) கம்பனியின்*** முகாமையின் பொறுப்புக்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) ***வ/வு கிரீன் (தனி) கம்பனியின்*** சாத்தியமான தொடர்புடைய தரப்பினர் ஊடுசெயல்களை இனங்காண்பதற்கு நீர் மேற்கொள்ளும் ஐந்து (05) கணக்காய்வு விதிமுறைகளை **கூறுக.** (05 புள்ளிகள்)

(C) தொடர்புடைய தரப்பினர் ஊடுசெயல்கள் மற்றும் மீதிகள் தொடர்பில் ***வ/வு கிரீன் (தனி) கம்பனியின்*** முகாமையிடமிருந்து பெறப்படும் எழுத்துமூல பிரதிநிதித்துவத்திலுள்ள (written representation) ஒரு விடயத்தினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(A) நீர் மார்ஷ்மலோஸ் பக்கற்றுகளை உற்பத்திசெய்து விற்பனை செய்யும் **வரையறுக்கப்பட்ட டேஸ்ற் கம்பனியின்** 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு அணியின் ஒரு அங்கத்தவராவீர். வாடிக்கையாளரிடமிருந்து கட்டளை பெறப்பட்டதும் மார்ஷ்மலோஸ் உற்பத்தி செய்யப்படும்.

வாடிக்கையாளரிடமிருந்து பெறப்படும் கட்டளையின் அடிப்படையில் உற்பத்திக் கட்டளையொன்று உற்பத்திக் கட்டுப்பாட்டாளரினால் தயாரிக்கப்பட்டு சமையலறை நிறைவேற்று அலுவலருக்கு அனுப்பப்படும். சமையலறை நிறைவேற்று அலுவலர், உற்பத்திக் கட்டளையின் அடிப்படையில் தேவையான மூலப்பொருட்களை மூலப்பொருட் களஞ்சியத்திலிருந்து கோருவதற்கு அமைய களஞ்சியம் மூலப் பொருட்களை வழங்கும். சமையலறை நிறைவேற்று அலுவலரினால் உரிய முறையில் கையொப்பமிடப்பட்ட பொருட் கோரிக்கைக் குறிப்பு (material requisition note - MRN) பெறப்பட்டால் மாத்திரமே மூலப்பொருட்கள் வழங்கப்படும். MRN இன் அடிப்படையில் களஞ்சியசாலை நிறைவேற்றுநரால் கையொப்பமிடப்பட்ட பொருட்கள் வழங்கல் குறிப்புடன் மூலப்பொருட்களின் உரிய கணியத்தினை களஞ்சியசாலை வழங்கும். ஒவ்வொரு நாள் முடிவிலும் MRN குறிப்புகள் பொருட்கள் வழங்கற் குறிப்புகளுடன் சமையலறை மற்றும் களஞ்சியம் இரண்டினாலும் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்படும்.

மார்ஷ்மலோஸ் தொழிற்சாலைச் சமையலறையில் உற்பத்தி செய்யப்பட்டு பொதியிடப்படும். நியமப் பொதியொன்று 20 மார்ஷ்மலோக்களைக் கொண்டதாகவும் 50 கிராம் நிறையுடையதாகவும் இருத்தல் வேண்டும். உற்பத்தி உதவியாளர்கள் உரிய உற்பத்திக் கட்டளைக்கு உற்பத்தி செய்யப்படும் பொதிகளின் நிறை மற்றும் அவற்றிலுள்ள எண்ணிக்கையினை சரிபார்த்து, அவற்றை முற்றுப்பெற்ற பொருட்கள் களஞ்சியத்திற்கு மாற்றப்படுதலினை அங்கீகரிக்கும் வகையில் சமையலறை மாற்றுதல் குறிப்பில் கையொப்பமிடுவர். சமையலறை மாற்றுதல் குறிப்பில்லாது முற்றுப்பெற்ற பொருட் களஞ்சியம் மார்ஷ்மலோஸ் பொதிகளை ஏற்றுக்கொள்ளாது. முற்றுப்பெற்ற பொருட் களஞ்சியசாலை நிறைவேற்றுநர் வாடிக்கையாளர் கட்டளையின் பிரதியை பொருட்கள் அனுப்புதற் குறிப்புடனும் (goods dispatch note) விற்பனைப் பட்டியலுடனும் (sales invoice) செவ்வைபார்த்து முற்றுப்பெற்ற பொருட்கள் தொழிற்சாலையிலிருந்து வாடிக்கையாளருக்கு விநியோகிப்பதற்காக அனுப்பப்பட முன்னர் செவ்வை பார்த்தமைக்குச் சான்றாக கையொப்பமிடுவார். (மூன்று வழி ஒப்பீடு - three-way matching).

ஒவ்வொரு நாள் முடிவிலும் விற்பனைப் பிரிவானது அனுப்பிய பொருட்கள் அறிக்கையினைத் தயாரித்து அந்த நாளுக்குப் பதிவுசெய்யப்பட்ட விற்பனையின் அளவுடன் ஒப்பிடும். மேலும் அனுப்பிய பொருட்கள் மாதிரியினை உரிய வாடிக்கையாளர் கட்டளைகள், உற்பத்திக் கட்டளைகள், மூலப்பொருட் கோரிக்கை மற்றும் வழங்கற் குறிப்புகள், சமையலறை மாற்றற் குறிப்புகள், பொருட்கள் அனுப்புகைக் குறிப்புகள் மற்றும் விற்பனைப் பட்டியல்களுடன் செவ்வைபார்த்து வேறுபாடுகள் காணப்படின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மூலப்பொருட் கோரிக்கைக் குறிப்பில் (MRN) உள்ளடக்கப்படவேண்டிய மூன்று (03) முக்கியமான விடயங்களை ***அடையாளங் காண்க.*** (03 புள்ளிகள்)

(b) கீழ்வரும் கட்டுப்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் தொழிற்பாட்டு விளைவுத்திறனை மதிப்பாய்வு செய்வதற்காக ஒவ்வொரு கணக்காய்வு விதிமுறையினை **அடையாளங்காண்க** :

(i) வாடிக்கையாளர்களின் கட்டளைகளின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்திக் கட்டளைகள்

(ii) செல்லுபடியாகும் உற்பத்திக் கட்டளை கிடைக்கப்பெற்றால் மாத்திரம் மூலப்பொருட் கோரிக்கைக் குறிப்பு வழங்கப்படுதல்

(iii) மூலப்பொருள் வழங்கல்களை மூலப்பொருட் கோரிக்கைகளுடன் ஒப்பிடுதல்

(iv) முற்றுப்பெற்ற பொருள் நிறைவேற்றுநரால் மேற்கொள்ளப்படும் மூன்று வழி ஒப்பீடு (Three way matching).

(v) விற்பனைப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகள் (05 புள்ளிகள்)

(c) உரிமம் (entity) மற்றும் அதன் சூழல் பற்றிய விளக்கத்தினை பெறுவதற்கு கணக்காய்வாளர் மேற்கொள்ள வேண்டிய மூன்று (03) கணக்காய்வு விதிமுறைகளை **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(d) **டேஸ்ற்** கம்பனியின் விற்பனைகளை சோதனை செய்வதில் கவனத்திற்கொள்ள வேண்டிய மூன்று (03) நிதிக் கூற்று உறுதிப்படுத்தல்களை (financial statement assertions) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(B) "தற்காலத்தில் அநேகமான வியாபாரங்கள் அவற்றின் தொழிற்பாடுகளில் பரந்தளவில் தகவற் தொழினுட்பங்களை பயன்படுத்துகின்றன. எனவே, அத்தகைய சூழலில் தகவல் தொழினுட்ப பொதுவான கட்டுப்பாடுகள் (general controls) முக்கியமாகின்றது"

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழே தரப்பட்டுள்ள தகவல் தொழினுட்ப பொதுவான கட்டுப்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு (02) உதாரணங்கள் வீதம் **நிரற்படுத்துக** :

(a) கணினிச் செயலியை (computer application) விருத்திசெய்தல்

(b) தரவுக் கோப்புகளில் அதிகாரம் அளிக்கப்படாத திருத்தங்களைத் தடைசெய்வதற்கான கட்டுப்பாடுகள்

(c) தொழிற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யும் கட்டுப்பாடுகள்

(d) கணினிச் செயற்கூற்றுக்களில் (programme) அதிகாரமற்ற மாற்றங்களைத் தடைசெய்தல் அல்லது கண்டுபிடித்தல் (08 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) உமக்கு உமது கணக்காய்வு வாடிக்கையாளரின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆண்டு இறுதி மீதிகளின் இருப்பினை உறுதிசெய்வதற்கான கணக்காய்வு விதிமுறைகளை மேற்கொள்ளும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. உமது கணக்காய்வுத் தேவைக்காக ஆதனம், பொறி மற்றும் உபகரண பதிவேடு உமக்குத் தரப்பட்டுள்ளது. பதிவேட்டில் தரப்பட்டுள்ள மீதிகள் பொதுப் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் இணங்குகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அறுதியீடு செய்ய (verify) கணக்காய்வாளர் மேற்கொள்ளும் கணக்காய்வு விதிமுறைகள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) கட்டுப்பாட்டுச் சோதனைகள் (test of controls) மற்றும் வலுவளிப்பு விதிமுறைகள் (substantive procedures) ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் உமது கணக்காய்வு வாடிக்கையாளரின் கட்டடங்களில் மாற்றங்கள் பற்றிய அட்டவணை கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| 2016 ஏப்ரல் 01 இல் மீதி | 15,000,000 |
| கூட்டு: ஆண்டின்போது சேர்ப்பனவுகள் | 7,000,000 |
| கழி: ஆண்டின்போது அகற்றப்பட்டவை | - |
| **2017 மார்ச 31 இல் மீதி** | **22,000,000** |

மேலுள்ளவை பற்றி நீர் மேற்கொண்ட கணக்காய்வு விதிமுறைகள் கம்பனிக் கட்டடத்தில் வலப் பக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளுடன் தொடர்புடைய ரூ. 2,500,000/- பெறுமதியான சேர்ப்பனவுகளைக் குறிக்கிறது. இந்தத் தொகை ஆண்டின் இறுதிக் காலங்களில் செலவு செய்யப்பட்டிருந்தது. சேர்ப்பனவுகள் தொடர்பான எஞ்சிய தொகை கம்பனி அலுவலகத்திற்காக நிருமாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தொகுதி தொடர்புபட்டதாகும். கணக்காய்வு வாடிக்கையாளரின் முகாமையானது முன்வைக்கப்பட்ட கணக்காய்வு செம்மையாக்கங்களை அதன் கணக்கேடுகளில் மேற்கொள்ளவில்லை. கணக்காய்வு வாடிக்கையாளரின் பொருண்மை மட்டம் ரூ. 800,000/- என நீர் தீர்மானித்துள்ளீர்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) உமது கணக்காய்வு வாடிக்கையாளரின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தில் இதன் தாக்கத்தினை **ஆராய்க.** (வேறு பிறழ்கூற்றுக்கள் அவதானிக்கப்பட வில்லை எனக் கொள்க.). (06 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளரின் அறிக்கையில் கணக்காய்வாளரின் அபிப்பிராயப் பந்தி தவிர்ந்த வேறு மூன்று (03) விடயங்களை (elements) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(C) *நீர்* **வ/வு ஷிரான் காமென்ற்ஸ் (தனி) கம்பனியின்** கணக்காய்வாளராவீர். அதன் காட்சியறை கொட்டாவ சந்திக்கு அருகில் அமைந்துள்ளது. கம்பனியின் கணக்காய்வாளர் என்ற ரீதியில் அதன் முகாமைப் பணிப்பாளருடன் நீர் நல்ல தொடர்பினை ஏற்படுத்தியுள்ளீர். அதன் விளைவாக இந்தக் காட்சியறையில் உமது கணக்காய்வு நிறுவன கிளை அலுவலகமொன்றினை நிறுவுவதற்கு உமக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலுள்ள சந்தை மதிப்பிலும் பார்க்க மிகவும் குறைந்த மாதாந்த வாடகைக்கு அதனை விடுவதற்கு முகாமைப் பணிப்பாளர் இணங்கியுள்ளார். நீர் இடைக்கால கணக்காய்வினை மேற்கொள்வதற்காக ஒரு சிரேஷ்ட ஊழியரை ஒதுக்கியுள்ளீர். இந்த சிரேஷ்ட ஊழியர் **வ/வு ஷிரான் காமென்ற்ஸ் (தனி) கம்பனியின்** கணக்காய்வினை கடந்த 12 ஆண்டுகளாக செய்துவருகின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேற்படி சந்தர்ப்பத்தில் அடிப்படைக் கோட்பாடுகளுடனான இரண்டு (02) ஒத்திசைவு அச்சுறுத்தல்களை (threats to compliance) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) AAT ஸ்ரீலங்காவின் அங்கத்தவர்கள் இசைந்து நடக்கவேண்டிய கீழ்வரும் அடிப்படைக் கோட்பாடுகளை **விபரிக்குக** :

(i) நோக்கச்சார்பு (Objectivity)

(ii) தொழில்சார் தகுதி (Professional Competence)

(iii) தொழில்சார் நடத்தை (Professional Behaviour) (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |